பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 29 செவ்வாய்க்கிழமை 15.11.2022 கதிர் 10

## இனிது ரகசியம் அல்ல!

இன்று என் பத்தி சந்திப்புகள் பற்றிய விவரிப்பாக இருக்கும். நேற்று நடந்த, இன்று நடைபெறவிருக்கின்ற சந்திப்புகள் பற்றிய விடயங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது உசிதம் என்று தோன்றியது.

☞ 2

# பாதுகாப்புக்குச் செலவுக்கு நிதி 41ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு

## பட்ஜெட்டில் 35 வீதத்தை அதுவே விழுங்குகிறது

கொழும்பு,நவம்பர்15

2023 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பாதுகாப்பு அமைச்சுக்கு 410 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரவு - செலவுத் திட்டத்தின் 35 வீதத்தைப் பாதுகாப்பு அமைச்சே விழுங்குகின்றது என்ற குற்றச்சாட்டின் மத்தியில், போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்து விட்டபோதும் பாதுகாப்பு அமைச்சிறகே மிக அதிக தொகை ஒதுக்கப்படுகின்றது.

☞ 2






## படையினரும் முற்கூட்டியே ஓய்வு பெறலாம்

இந்த வரவு - செலவு திட்ட முன்மொழிவுகளில் ஆயுதப் படை உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே ஓய்வு பெறுவது தொடர்பான முன்மொழிவு சேர்க்கப்பட்டுள்ளது.

இதன்படி, விசேட பிரிவினர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களுக்கு 18 வருட

☞ 2

## உப்புச் சப்பில்லாத பயனற்ற ‘பட்ஜெட்’!

### ரணிலின் உரை குறித்து சுமந்திரன் காட்டம்



கொழும்பு,நவம்பர்15

“இது உப்புச் சப்பில்லாத - உருப்படியற்ற - பட்ஜெட். ஒரு செலவு விவரமும் இல்லை. ஆக வழமை போல வரவு இவ்வளவு, செலவு இவ்வளவு என்று ஏதோ காட்டி இருக்கின்றார்கள். அவ்வளவுதான். பொருளாதார நெருக்கடியில் மூழ்கிக் கிடக்கும் நாட்டை அதிலிருந்து மீட்பதற்கான எந்த உருப்படியான திட்டமோ, யோசனையோ அதில் இல்லை.”

-இப்படி நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவு திட்டத்தை மிகக் காட்டமாக விமர்சித்து இருக்கின்றார் தமிழ்ல் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட

☞ 2

## இன்று தொடக்கம் விவாதம் டிசம்பர் 8 வரை சபை கூடும்

2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்கான ஆரம்ப உரையை (வரவு - செலவுத் திட்ட உரை) ஜனாதிபதியும் நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருமான ணில் விக்கிரமசிங்க நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

இதற்கமைய ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் இன்று ஆரம்பமாகவிருப்பதுடன், இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 22ஆம் திகதி

☞ 2

## காணி சுவீகரிப்புக்கு எதிராக கஜேந்திரகுமார் போர்க்கொடி

### வடக்கு ஆளுநருக்குக் கண்டனம்




வடக்கில் முப்படைகளுக்கும் காணிகளைத் தாரை வார்க்கும் ஆளுநரின் முயற்சியைக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில் ஆளுநரின் செயலகத்தில் இன்று நடைபெறவுள்ள கூட்டத்தைக் கடுமையாக எதிர்க்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

☞ 2

## 2023ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை நாடாளுமன்றில் சமர்ப்பித்த ஜனாதிபதி

### அரசின் செலவீனத்துக்கு 7,885 பில்லியன் ரூபா ஒதுக்கீடு



2023 ஆம் நிதியாண்டுக்கான முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்டமூலம் நிதி அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால்நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டது.

இது நாட்டின் 77 ஆவது வரவு - செலவுத் திட்டம் என்பதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்படும் முதலாவது முழுமையான வரவு - செலவுத் திட்டமாகும்.

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரசின் செலவீனத்துக்கு 7 ஆயிரத்து 885 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

21 ஆம் நூற்றாண்டின் நவீன உலகுக்கு ஏற்ற புதிய பொருளாதாரத்தைக்

☞ 2

## சாந்தன், பயஸ், ஜெயக்குமார் 10 நாள்களில் இலங்கைக்கு!

### முருகன் லண்டன் செல்ல முயற்சி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.15

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் 32 வருட சிறைவாசத்தின் பின்னர் விடுதலைஉ ஆகியுள்ள இலங்கையர்களான சாந்தன், ரொபேட், ஜெயக்குமார் ஆகிய மூவரையும் 10 நாள்களில் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை இடம்பெறுவதாக

☞ 2

## எதிர்பார்ப்புகளைச் சிதறடித்த ‘பட்ஜெட்’ என மனோ விசனம்

நிதி அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு - செலவுத் திட்ட உரையில் காணப்படுகின்ற, தோட்ட தொழிலாளர்கள் மற்றும் கொழும்பு மாநகர பாமர மக்கள் தொடர்பிலான அலட்சியப்போக்கு எம்மை ஏமாற்றமடையச் செய்துள்ளது.



## பாஸ்போர்ட் கட்டணம் 20 வீத உயர்வு

கடவுச்சீட்டு மற்றும் வீசா கட்டணங்கள் 20 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**சந்திப்பு - ஒன்று**

நேற்று, வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த பின்னர் எம்.பிக்களுடன் ஒரு தேநீர் விருந்து சந்திப்பில் கலந்துரையாடினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பிரதான மேசையில் ரணில், பிரதமர் தினேஷ், எதிர்க்கட்சித் தலைவர் சஜித், எதிரணியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியல்ல, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய மூத்த உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர். வழமையாக இத்தகைய கூட்டத்தில், மற்றொரு மூத்த உறுப்பினராகத் தமிழர் தரப்பில் சம்பந்தன் இருப்பார். நேற்று அவர் நாடாளுமன்றுக்கு வரவில்லை. அதனால் சுமந்திரனை அழைத்து இருத்தி இருந்தார்கள்.

காங்கேசன்துறையில் ‘தல்செவனவு’க்குப் பக்கத்தில், தனியார் காணியை ஆக்கிரமித்திருக்கும் இராணுவம், அதில் நேற்று நிலையான சிமெந்துக் கட்டடங்களைக் கட்டுகின்றது எனத் தமக்குத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை இச்சமயம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தார் சுமந்திரன். தமது ஆளணியின் பிரதம அதிகாரி சாகல இரட்ணாயக்காவின் கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

அப்போது ஜனாதிபதியிடம் தமிழ் கட்சிகளுடன் அவரது உத்தேச பேச்சு எப்போது என்று சுமந்திரன் வினாவினார். ‘நீங்கள் விரும்பினால் இந்தக் கிழமை பார்க்கலாம்’ என்று பந்தைத் தமிழ்க் கட்சிகள் பக்கம் அடித்து, சுரத்தினின்றிப் பதிலளித்தார் ஜனாதிபதி. இந்த வாரத்தில் பேச்சு என்று கடந்த வாரம் தாமே தம்பாட்டில் இது பற்றிய அறிவிப்பை நாடாளுமன்றத்தில் விடுத்த ரணிலின் போக்கில், பின்னர் இப்போது பின்னடிப்பு காணப்படுவது சுமந்திரனை ஆச்சரியத்துக்குள் மூழ்கடித்தது.

அதேசமயம் ஜனவரியில் யாழ்ப்பாணத்துக்குத் தான் நேரில் வருவார் என்று சுமந்திரனிடம் ஒரு தகவலை சொல்லி வைத்தார் ஜனாதிபதி ரணில் எனவும் அறிய வந்தது.

**சந்திப்பு - இரண்டு**

இன்று காலை 9.30 மணிக்குப் பல்வேறு விடயங்களை ஒட்டி, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் கூட்டாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச உள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் நியமனம் குறித்து ஹக்கீம் நிச்சயம் ஜனாதிபதியுடன் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்போது வடக்கு ஆளுநருக்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகள் அடைந்திருக்கும் சீற்றம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு மனோ கணேசன் கொண்டு வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அச்சமயம், சமாதானப் பேச்சுகளுக்கு உகந்த சூழல் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில், சகல தரப்புகளுக்கும் இணக்கமான ஒருவரை வடக்கு ஆளுநராகத் தாமதமின்றி நியமிக்க வேண்டிய கட்டாயத்தை மனோ கணேசன் ஜனாதிபதிக்கு எடுத்துரைப்பார் எனத் தெரிகிறது

**சந்திப்பு - மூன்று**

ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் மற்றும் சமாதானத்தை கட்டி எழுப்புதல் தொடர்பான மூத்த ஐ.நா. பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இன்று காலை கொழும்பில் ஐ.நா. அலுவலகத்தில் முக்கிய சந்திப்பு ஒன்று நடக்க இருக்கின்றது. சம்பந்தன், மாவை, சித்தர், செல்வம், சுமந்திரன் ஆகிய ஐவர் இந்தச் சந்திப்பில் பங்கு பற்றுவர் எனத் தெரிகின்றது.

**சந்திப்பு - நான்கு**

இன்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் வீட்டில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கூடும் சந்திப்பு இடம் பெறுகிறது.

இந்தச் சந்திப்புக்கான அழைப்பு கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனால் மின்னஞ்சல் மூலம் கட்சித் தலைவர்களுக்கு விடுக்கப்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழைப்பாகவே அந்த கடித வாசகம் அமைந்தது. கூட்டம் சம்பந்தனின் கொழும்பு வீட்டில் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு ஒரு சந்தேகம். இந்த அழைப்பு சம்பந்தருடையதா அல்லது சுமந்திரன் தன்பாட்டில் அனுப்பியதா என்று அறிய விரும்பிய அவர், அதைக் குறிப்பிட்டு சுமந்திரனுக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி இருந்தார். அது சம்பந்தனின் வழிகாட்டுதலில் விடுக்கப்பட்ட அழைப்புத்தான் என்பதை சுமந்திரன் ஊர்ஜிதப்படுத்தினார்.

ஆக, இன்றைய கூட்டத்தில் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் தலைவர்கள், நீதியரசர் விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் பங்கு பற்றுவர் என்பது உறுதி.

சிறிகாந்தா, அனந்தி சசிதரன், ஐங்கரநேசனுக்கு அழைப்புப் போனதாக இல்லை. அதனால் அவர்கள் பங்கு பற்ற இடமில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பங்கு பற்றுவாரா என்பதும் தெரியவில்லை. நேற்று முன்னிரவில் அக்கட்சியின் உயர் மட்டக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றதாக ஒரு தகவல். என்ன முடிவு எடுத்தார்கள் என்று தெரியவில்லை.

நேற்று நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைச் சந்தித்த சுமந்திரன், இன்றைய கூட்டம் குறித்து அவரிடம் நேரில் பிரஸ்தாபித்தார். கஜேந்திரகுமாரோ தெளிவான பதில் கூறாமல் சிரித்துச் சமாளித்தார் எனத் தகவல்.

“அன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் உங்களைப் பார்த்துதானே (பெயர் குறிப்பிட்டு) பேச்சுக்கு வர அழைத்தார். அரைவாசி தூரமாவது வாருங்கள் என்று உங்களைப் பார்த்துக் கேட்டுக் கொண்டாரே.” - என்றார் சுமந்திரன்.

“அன்று சபையில் நான் மட்டும்தான் இருந்தேன். அதனால்தான் என் பெயரைச் சுட்டினார் ஜனாதிபதி” - என்றார் கஜேந்திரகுமார்.

“இல்லை, இல்லை. பேச்சு முயற்சி குழம்பும் விடயத்தில் அல்லது அதைக் குழப்பும் விவகாரத்தில் தமிழர் தரப்பு மீது பிழைகளைப் போட ரணில் முயற்சிக்கின்றார். நீங்கள் வாய்ப்பான ஆள் என்று எண்ணி நேரத்துடன் உங்கள் பெயர் சொல்லி சூழலை ஒழுங்குபடுத்துகிறார். அதற்கு இடம் கொடுத்து விட வேண்டாம்” - என்று கஜேந்திரகுமாருக்கு அட்வைஸ் கொடுத்தார் சுமந்திரன். அந்த அட்வைஸுக்கும் பதில் கூறாமல் சமாளித்து விட்டு இடத்தை விட்டு நகர்ந்தார் கஜேந்திரகுமார்.

இன்றைய சந்திப்புக்களின் உள்வீட்டு விவரங்களை நாளை பார்ப்போமா வாசகர்களே...!

**- மின்னல் -**

## பாதுகாப்புக்குச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் நாடாளுமன்றில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்திலேயே இந்தத் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட தொகையில் இராணுவத்திற்கு 20 ஆயிரத்து 900 ஆயிரம் கோடி ரூபாவும், கடற்படைக்கு 7 ஆயிரத்து 500 கோடி ரூபாவும், விமானப்படைக்கு 6 ஆயிரத்து 600 கோடி ரூபாவும், கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்ட பல நோக்குப் படையணிக்கு 980 கோடி ரூபாவும், பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்கு 12 ஆயிரத்து 900 கோடி ரூபாவும், பொலிஸாருக்கு 11 ஆயிரத்து 600 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி நிலையில் புதிய வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வளவு பெருந்தொகை ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

## உப்புச் சப்பில்லாத ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

ஆக, பாதுகாப்பு செலவு மட்டும் கண்முன் தெரியாமல் உயர்ந்திருக்கின்றது. கடந்த தடவை வரவு - செலவு திட்டத்திலும் பாதுகாப்புக்குப் பெருமளவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. பிறகு கடந்த ஏப்ரலில் செய்யப்பட்ட இடைக்கால ஒதுக்கீட்டிலும் பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி மேலும் அதிகரிக்கப்பட்டது. இப்போது அந்த இரண்டையும் விட அதிகமான ஒதுக்கீடு அந்த அமைச்சுக்கு செய்யப்பட்டுள்ளது

பொருளாதார நெருக்கடியில் மூழ்கி கிடக்கும் நாட்டை மீட்பதற்கு செலவினத்தை குறைக்கும் ஏற்பாடு ஏதுமில்லை. மாறாக இப்படி அது உயர்த்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பது குறித்து இந்த பட்ஜெட்டில் எதுவும் இல்லை.

எதையுமே - எந்தத் திசையையுமே காட்டாத ஒரு பட்ஜெட் இது.

ஆனால் அந்த உரையில் பொத்தம் பொதுவில் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று அதிகம் விவரித்து இருக்கின்றார் ஜனாதிபதி. அதைவிட எதுவும் இல்லை. அதில் இலக்க எண்ணிக்கையில் பார்த்தால் அங்கு ஒன்றுமில்லை என்பது தெளிவாகும். - என்றார் சுமந்திரன்.

## இன்று தொடக்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 5 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் தினமும் முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரையும் நடைபெற விருப்பதுடன், அதன் பின்னர் பிற்பகல் 5.30 மணி முதல் பிற்பகல் 6 மணி வரையான காலப் பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்வி அல்லது சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும்.

இதன் பின்னர் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான குழுநிலை விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதுடன் இது டிசம்பர் 8ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதன் மீதான விவாதம் முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 7 மணிவரை நடைபெறும். இதன் மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 8ஆம் திகதி பிற்பகல் 7 மணிக்கு நடைபெறும்.

இதற்கமைய டிசம்பர் 8ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஞாயிறு மற்றும் போயா தினங்கள் தவிர கிழமையின் ஏனைய நாள்களில் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும்.

வரவு - செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் காலப் பகுதியில் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்படவில்லை.

## படையினரும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையின் பின்னர் ஓய்வு பெறும் சந்தர்ப்பம் வழங்க இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

உற்பத்தி பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

## காணி சுவீகரிப்புக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தச் செயற்பாடு அரசின் உண்மையான முகத்தைக் காட்டுகின்றது. சர்வதேச மட்டத்தில் இனங்களுக்கிடையே ஒற்றுமை, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக போலியான தோற்றப்பாட்டை காட்டுவதற்கு ஜனாதிபதி நாடாளுமன்றில் பேச்சுக்கு அழைத்துக்கொண்டு அதேசமயம் அவருடைய தூதுவராக இருக்கக் கூடிய வடக்கு, கிழக்கு ஆளுநர்களைக் கொண்டு காணி சுவீகரிப்பு என்ற விடயத்தை மிகவும் நாசூக்காக செய்கின்ற உண்மை முகம் இப்போது அம்பலமாகியுள்ளது.

எம்மை பொறுத்தவரையில் இந்தப் பேச்சு என்ற போலி முகம் இப்படிப்பட்ட செயற்பாடுகள் உண்மைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டும் என நம்புகின்றோம்.

இந்த நடவடிக்கைகளுக்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து மக்களுடன் போராட்டங்களை நடத்துவோம் - என்றார்.

## சாந்தன், பயஸ், ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.பிரதீப்குமார் நேற்று ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

சாந்தன் என்னும சுரேந்திரராஜா மற்றும் ரொபேட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரையும் 10 நாள்களிற்குள் அவர்களது நாட்டிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இவர்கள் தற்போது திருச்சியில் உள்ள இலங்கை அகதிகளிற்கான சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை அனைவரும் சந்திக்கவும் அனுமதிக் கப்பட்டுள்ளது.

இதேநேரம் முருகன் என்னும் சிறீகரன் தான் பிரித்தானியாவில் உள்ள மகளிடம் செல்ல விரும்புகிறார் எனத் தெரிவித்துள்ளார். அதனால் அவரை அங்கு அனுப்புவதற்கான முயற்சி இடம்பெறுகின்றது. இதற்காக பிரித்தானிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளோம். அங்கிருந்து கிடைக்கும் பதிலிற்காகக் காத்திருக்கின்றோம். -எனத் தெரிவித்துள்ளார்.

## இன்று தொடக்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியெழுப்பும் பணி, 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஊடாக ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## எதிர்பார்ப்புகளைச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு கொழும்பு மாவட்ட எம்.பியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்றைய வரவு - செலவுத் திட்ட உரை தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

உலக வங்கி, ஐ.நா. நிறுவனமான உலக உணவு திட்டம் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றால், உணவின்மை மற்றும் வறுமை ஆகிய விடயங்களில் இலங்கையிலேயே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பின்தங்கிய பிரிவினராகப் பெருந்தோட்ட மக்கள் மற்றும் மாநகர பாமர மக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தப் பின்தங்கிய பிரிவினருக்கான விசேட ஒதுக்கீட்டு திட்டங்களை ஜனாதிபதி அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது நடைபெறவில்லை. உடனடியாக நிவாரணத் திட்டங்கள் இல்லாவிட்டாலும் கூட, இம்மக்களின் இக்குறைபாடுகள் பற்றி தான் அறிந்துள்ளேன் என்பதை ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டுக் கூறி இருக்க வேண்டும். அப்படியாயின், இந்த நலிவடைந்த மக்களை அது ஓரளவு சாந்தப்படுத்தி இருக்கும்.

தமது பிரச்சினைகள் பற்றி ஆளுகின்ற அரசு அறிந்து வைத்துள்ளது என்பதை அறிந்து மக்கள் சற்று நம்பிக்கை அடைந்து இருப்பார்கள். தீர்வுகள் தாமதமாகி வரும் என ஆறுதல் அடைந்து இருப்பார்கள்.

ஆனால், உயிருள்ள உழைக்கும் மக்களை மறந்து விட்டு, தோட்டங்களில் உள்ள காணிகளைப் பற்றி பேசி, பயிரிடப்படாத காணிகளை, புதிய முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்து கொடுக்க போவதாக நிதி அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வரவு - செலவுத் திட்ட உரையில் கூறியுள்ளார்.

நமது மக்களுக்குப் பயிரிடப்படாத காணிகள் தருவதாக எனக்கு நாடாளுமன்றத்தில் தந்த வாக்குறுதியை அவர் மறந்து விட்டார். அப்போது அவர் பிரதமர். இப்போது ஜனாதிபதி. ஆனால், நாம் மறக்கவில்லை. நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை வரை துன்பப்படும் நமது மக்களை, இந்த அலட்சியம் கொல்லாமல் கொல்கின்றது. - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அரசியல் செய்தவர் அல்லர்!

## ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவிப்பு

(கி.வசந்தரூபன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் அரசியல் செய்தவர் அல்லர் என தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளை தலைவரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் முன்னாள் போராளிகள் நலன் பேணும் அமைப்பின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கல்வி தரைப்படுத்தல் சட்டம் கொண்டுவரப்பட்டமை யால் எனது திசைமாறி சட்டக்கல்லூரிக்கு சென்றேன். அன்று நான் சட்டக்கல்லூரி சென்றிருக்கா விட்டால் உங்களில் ஒருவனாக இங்கு இருந்திருப்பேன். இல்லை யென்றால் இறுதி போரில் இறந்து இருப்பேன். இது தான் உண்மை.

உங்களுடைய வேதனை, உங்களது துயரம், துன்பம் அவற்றை நான் 47 ஆண்டுகளாக உணர்ந்துள்ளேன். 1989 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது நான் சட்டக்கல்லூரி இறுதியாண்டு மாணவனாக இருந்தேன். அப்போது எதிர்க்கட்சி தலை வராக முதன் முதலாக தமிழர் ஒருவர் தெரிவு செய்யப் பட்டிருந்தார். அவர் தான் அமிர்தலிங்கம் அவர்கள். பயங்கரவாத தடைச்சட்டம் அமுலுக்கு வர திகதி குறிப்பிட் டிருந்த நிலையில் அவருடன் பேசியிருந்தோம். அப்போது நாங்கள் இளைஞர்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் வருகிறது. அதனை எதிர்க்க வேண்டும். அது இளைஞர் களை பாதிக்கும் என அவரிடம் கூறினோம். ஆனால் அவர்கள் அதை எதிர்க்கவில்லை. அது வேறு விடயம்.

இப்பொழுது போராளிகள் நலன்புரி சங்கம் உருவாக் கப்படுகிறது. இந்தப் போராளிகள் போராடியமை, அவர் களது இழப்புக்கள் எல்லாம் அவர்களது சொந்த நன்மைக் காக அல்ல என்பதை எமது சமூகம் தெரிந்துகொள்ள வேண்டும்.

எந்த மண்ணுக்காக – தாய்மொழிக்காக – இனத்துக் காக – போராடினார்களோ அந்த இனமே அவர்களை இப்போது மறந்து விட்டார்கள். இது தான் உண்மை. அவர்களது நிலைப்பாட்டை அறிய வேண்டும்.

ஒவ்வொருவரும் கைது செய்யப்படும் போது அவர்க ளது பெற்றோர், சகோதரர்கள் கதைகளை 40 வருடங்க ளாகக் கேட்டிருக்கிறேன். அவர்களின் துன்பம் எனக்குத் தெரியும். இந்தப் போராளிகள் ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என்றே நான் கருதுகின்றேன்.

அவர்களது தேவைகளைப் புரிந்துகொள்ள வேண் டும். இது அரசியல் அல்ல. தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைவர் அரசியல் செய்யவில்லை. நீங்கள் அர சியல் செய்யவில்லை. அம்பாறை பறிபோய்விட்டது.



வவுனியா, முல்லைத்தீவு என எமது மண்ணை இழந்து கொண்டு போகிறோம்.

எங்கள் மண் இழக்கப்படுமாக இருந்தால் எங்களது மொழி, கலை, கலாசாரம் அழியும். இதை பாதுகாக்கவே நீங்கள் போராடினீர்கள். முன்னாள் போராளிகளான இந்த சங்கத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். எங்களுக்காக, உரிமைக்காகப் போராடுபவர்களது தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனது மனைவி இப்போது உயிருடன் இல்லை. கௌரி சங்கரி அறக்கட்டளை நிறுவி எமது இனத்துக்காக உதவி செய்வேன். – எனத் தெரிவித்தார்.

# முட்டைகளைப் பதுக்கி வைத்தால் நடவடிக்கை!

## அமைச்சர் எச்சரிக்கை



முட்டைகளை பதுக்கி வைக்கும் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபா ரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ எச்சரித்துள்ளார்.

சந்தையில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட வில்லை எனவும், எனினும் சிலர் முட்டைக்கு தட்டுப் பாடு இருப்பதாக சித்திரிக்க முயல்கின்றனர் எனவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட் டுள்ளார்.

முன்னதாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட முட்டை விலையை மேலும் அதிகரிக்க ஒருபோதும் அனுமதி வழங்கப்போவதில்லை என்றும் வர்த்தக அமைச்சர் கூறியுள்ளார்.

உற்பத்தி செலவு கணிசமாக உயர்ந்துள்ளதால், அரசாங்கம் அறிவித்துள்ள அதிகபட்ச சில்லறை விலைக்கு முட்டையை விற்க முடியாது என முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத் தக்கது.

# அனைத்து ஹோட்டல்களும் மூடப்படும் நிலைமையில் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை!

எதிர்வரும் மூன்று நாளகளுக்குள் அரசாங்கம் முட்டை பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்று தர வேண்டும் என்றும் இல்லையேல் நாட்டில் உள்ள அனைத்து ஹோட்டல்க ளும் மூடப்படும் என்றும் அகில இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

தற்போது சந்தைகளில் கட்டுப்பாட்டு விலைக்கும் அதி கமான விலைகளில் முட்டை விற்பனை செய்யப்படுகிறது. இருப்பினும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை முட் டையை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர் களை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராக அதி களவிலான வகையில் தண்டப்பணம் விதித்துள்ளது. இதனை நாம் வரவேற்கிறோம்.

மேலும் அரசாங்கம், விவசாய அமைச்சு இணைந்து முட்டை தொடர்பிலான பிரச்சினைகளை முட்டை விநியோ கம் செய்யும் சங்கங்களுடன் இணைந்து கலந்தாலோ சித்து பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்.

தொடர்ச்சியாக முட்டை தொடர்பில் எழும் பிரச்சினை களுக்கு தீர்வு காணவில்லை என்றால் சிறுவர்கள், வயோதி பர்கள், நோயாளர்கள், பேக்கரி உற்பத்தியாளர்கள் மற் றும் முட்டையை அடிப்படையாகக் கொண்டு தொழில் புரி பவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். அவர்களின் சீவனோபாயம் பாதிக்கப்படும்.

நாட்டில் முட்டையின் விலை அதிகரிப்பு, முட்டை தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு இவை இரண்டுக்கும் இடையில் உணவு உற்பத்திகள், சிற்றுண் டிச் சாலைகள் முற்றாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட் டுள்ளது.

எனவே இது தொடர்பில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத் தரவில்லை என்றால் அனைத்து சிற்றுச்சாலை களும் மூடும் நிலை ஏற்படும்.

மேலும் அரசாங்கம் முட்டையை சாதாரண விலைக்கு பெற்றுத் தருவதோடு சந்தையில் நிலவும் முட்டை தட்டுப் பாட்டுக்கும் தீர்வு பெற்றுத் தர வேண்டும். – என்றார்.

# அரசமைப்புப் பேரவைக்கு சிவில் சமூக உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பம்!

21 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரசமைப்பு பேரவைக்கு சிவில் சமூக உறுப்பினர்களை நியமிக்கத் தகுதியான நபர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி விண்ணப்பங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, எந்தவொரு அரசியல் கட்சியிலும் உறுப்பி னர்களாக இல்லாதவர்கள், பொது அல்லது தொழில் வாழ்க்கையில் சிறந்த ஆளுமை கொண்டவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

# 26 கோடி கிலோ தேயிலை உற்பத்தியை எட்டமுடியாமல் போனமைக்கான காரணத்தை வெளியிட்டது இலங்கை!

## பெருந்தோட்ட சங்கம் தகவல்

இரசாயன உரங்கள் மற்றும் பிற விவசாய இரசாயனங் கள் மீதான குறுகிய காலத் தடைக்கு மத்தியில் இந்த ஆண்டில் மதிப்பிடப்பட்டிருந்த 26 கோடி கிலோ கிராம் தேயிலை உற்பத்தியை எட்ட முடியாமல் போனதாகவும், 2023 ஆம் ஆண்டில் இலங்கையில் 30 கோடி கிலோ கிராம் தேயிலையை உற்பத்தி செய்து மீண்டு எழுவோம் என இலங்கை பெருந்தோட்ட சங்கத்தினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாகக் கொழும்பிலுள்ள நட்சத் திர ஹோட்டலொன்றில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவர் சேனக்க அலவத்தேகம,

தற்போதைய நிலைமைகள், உரப் பிரச்சினை மற் றும் பிற காரணிகளால், 2022 ஆம் ஆண்டின் இறு திக்குள் சுமார் 26 கோடி கிலோகிராம் தேயிலையை எதிர்பார்க்கிறோம்.

2023 ஆம் ஆண்டில், 30 கோடி கிலோகிராம் மொத்த உற்பத்தியை எதிர்பார்க்கிறோம். ஏனைய விவ சாய இரசாயனங்களும் மீண்டும் கிடைக்கும் என நம் பிக்கை இருக்கிறது. எவ்வாறாயினும், தேயிலை ஏற்றுமதி வருமானம் 2021 இல் பதிவான 130 கோடி அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் –

அதிக விலைகள் காரணமாக, இந்த ஆண்டு 140 கோடி அமெரிக்க டொலர்களாக சிறிதளவு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்காக எதிர்பார்க்கப்படும் 26 கோடி கிலோகிராம் உற்பத்தி, 2021 இல் பதிவு செய்யப்பட்ட 299 கோடியே 33 லட்சம் கிலோகிராம் உற்பத்தியிலிருந்து கணிசமாகக் குறைவாக உள்ளது.

தோட்டங்களுக்கு இரசாயன உரங்கள் கிடைக்க ஆரம்பித்துள்ள போதிலும், உரங்கள் அதிக விலைக்கே கிடைக்கப் பெறுகிறது. – என்றார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னத்தின் ஊடாக, பிரபலமான களைக்கொல்லியான கிளைபோசைட்டை அடுத்த ஓரிரு மாதங்களுக்குள் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் கிளைபோசேட் மீதான தடையைத் தளர்த் திய போதிலும், களைக்கொல்லியின் பாவனை, விநியோ கம் மற்றும் இறக்குமதியை தடைசெய்து வெளியிடப்பட் டுள்ள சுமார் 16 வர்த்தமானி அறிவித்தல்களை அரசாங் கம் மாற்றியமைக்க வேண்டும் என அலவத்தேகம சுட் டிக் காட்டினார்.

தடையின் உட்பொருளை அவர்கள் புரிந்து கொண் டுள்ளனர். தடையை தளர்த்துவதற்கு அரசாங்கமும் விட யத்துக்கு பொறுப்பான அமைச்சரும் எமக்கு ஆதரவுக் கரம் நீட்டியுள்ளனர். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வரும்; ஆனா வராது

'வரும்;ஆனா வராது!' – இந்த வசனத்தின் அர்த்தம் தமிழ் வாசகர்களுக்கு நன்கு தெரியும். 'தொட்டால் பூ மலரும்' திரைப்படத்தில் வைகைப்புயல் வடிவேலுவும், என்னத்தே கண்ணையாவும் நடித்த இந்த நகைச்சுவை காட்சி பலரின் மனதில் பதிந்த ஒன்றுதான்.

தென்னிலங்கை அரசியலிலும் ஒரு விடயம் இப்படிப் பேசப்படுகின்றது.

பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஆறு எம்.பிக்கள் நேற்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் சேர்ந்தார்கள் என்று பரபரப்பாக செய்திகள் வெளியாகின. ஐக்கிய மக்கள் சக்தி அப்படித்தான் அறிவித்தது.

ஆனால் வேறு வட்டாரங்கள் அப்படி அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் சேரவில்லை என்று அடித்துக் கூறுகின்றன.

விசாரித்துப் பார்த்தால் 'வரும்; ஆனா வராது!' என்ற மாதிரி, 'சேர்ந்தார்கள்; ஆனா சேரவில்லை!' எனும் பாணியில் பதில் கிடைக்கின்றது.

இந்த ஆறு பேர் அணி ஏற்கனவே பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியே வந்து, தனி அணியாக இயங்கியது. அந்தப் பக்கமும் இல்லாமல், இந்தப் பக்கமும் இல்லாமல், மதில் மேல் பூனை நிலைப்பாடு எடுத்திருந்தது.

இப்போது பிரதான எதிரணி பக்கம் அது சாய்ந்திருக்கின்றது என்பது உண்மை. ஆனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் அது இணைந்தது என்று அக்கட்சி கூறுவது போல நடக்கவில்லை.

"ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் ஓர் அணியாக இயங்கவே நாம் முன் வந்தோம். அதன் அர்த்தம் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் நாங்கள் சேர்ந்து விட்டோம் என்பதல்ல" – என்று அந்த அணியின் தலைவரான அனுரா பிரியதர்ஷன யாப்பா நேற்று மேற்படி ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியின் பங்காளிக் கட்சித் தலைவரான மனோ கணேசனிடம் கூறியிருக்கின்றார் என அறிய வந்தது.

ஆனால் அணி மாறியவர்கள் என்று கூறப்பட்டுள்ள ஆறு பேரில் மற்றொருவரான திருமதி சுதர்ஷினி பெனாண்டோபுள்ள இன்னும் சற்று வேறு விதமாகக் கருத்து வெளியிட்டு இருக்கின்றார்.

"ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் நாங்கள் சேர்ந்து கொண்டோம் என்பது தவறு. கூட்டு எதிரணியாக செயல்பட நாங்கள் (ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியும், தங்களின் அறுவர் கொண்ட சுயாதீன அணியும்) இணங்கி கொண்டோம். அவ்வளவுதான்" – என்று நிலைமையைத் தெளிவுபடுத்தி இருக்கின்றார் அவர்.

அப்படி என்றால் இந்த அறுவர் அணி பிரதான எதிரணியுடன் இணைந்து கொண்டு விட்டதா? இல்லையா?

'இணைந்து கொண்டு விட்டது; ஆனா இணையவில்லை!' – என்பதுதான் பதில்.

## பொது விளையாட்டு மைதானம்கோரி பொத்துவிலில் பாரிய ஆர்ப்பாட்டம்!




பொத்துவில் சுயாதீன இளைஞர் அமைப்பினர் பொத்துவில் பிரதேசத்துக்கென்று பொது விளையாட்டு மைதானம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கொட்டும் மழைக்கு மத்தியில் இளைஞர்கள் ஆவேசத்துடன் நேற்று (திங்கட்கிழமை) கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது மைதானத்துக்காக ஒன்றிணைவோம், அரசியல் பேதமில்லை, வேறுபாடு என்றுமில்லை, ஓரணியில் நிற்போம், பேரணியாய் செல்வோம், இனவாதம் வேண்டாம், இளைஞர்களுக்கு மைதானத்தை பெற்றுத்தா எனும் தொனிப் பொருளில் இந்தப் பேரணி பொத்துவில் பூட் சிற்றி அருகில் ஆரம்பித்து பிரதான வீதி ஊடாக பொத்துவில் பிரதேச செயலகம் வரையும் கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். போக்குவரத்துக்கு எந்த விதமான இடைஞ்சலும் ஏற்படவில்லை.

பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸை பிரதான நுழைவாயிலுக்கு பேரணியினர் வரவழைத்து தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை பகிரங்கமாக வாசித்து அவரிடம் ஒப்படைத்தனர்.

இதன் போது பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.

இதன் போது பொத்துவில் பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில் –

இது விடயமாக உங்களது கோரிக்கையை அம்பாறை மாவட்ட செயலாளருக்கு தெரியப்படுத்துகின்றேன். இது விடயமாக ஏற்கனவேயும் தெரியப்படுத்தியுள்ளேன். இதன் போது உங்களது ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டு நீங்கள் கூறும் இடம் அரச காரணியாக இருக்கும் பட்சத்தில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் இதன் போது தெரிவித்தார்.

இந்த மகஜரில் 30 விளையாட்டு கழகத்தினரும், 20 பாடசாலைகளும் ஒப்பமிட்டுள்ளன. இந்தப் பேரணியில் சுமார் 500 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## வீசா இன்றி தங்கியிருந்த ஜேர்மன் பிரஜை கைது!

கொழும்பு, நவ. 15

களுத்துறை ஹோட்டல் ஒன்றில் வீசா இன்றி நாட்டில் தங்கியிருந்த ஜேர்மன் பிரஜை ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வஸ்கடுவ பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் போது ஜேர்மன் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் களுத்தறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## புகையிலை மற்றும் மதுசார நிறுவனங்களின் பெயர்களை கல்வி தொடர்பான நிகழ்வுகளில் பயன்படுத்த முடியாது!

### மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் அறிவிப்பு

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் சட்டத்தின்படி புகையிலை நிறுவனமொன்றின் அல்லது மதுசார நிறுவனமொன்றின் பெயரை விளையாட்டு, கல்வி சம்பந்தப்பட்ட பொது நிகழ்வுகளில் அமைச்சரொருவர் நன்றி தெரிவிக்க முடியாது என்பதுடன் அந்த நிறுவனங்களிடமிருந்து அனுசரணையைக்கூட பெற்றுக்கொள்ள முடியாதென மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் பணிப்பாளர் புபுது சமரசேகர தெரிவித்தார்.

எனினும், நிகழ்வொன்றின்போது துறைசார் அமைச்சர் குறித்தவொரு பியர் நிறுவனத்தின் பெயரைக் கூறி, அந்த நிகழ்வை ஏற்பாடு செய்தமைக்கு நன்றி தெரிவித்திருந்தாக புபுது சமரசேகர சுட்டிக்காட்டினார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் –

இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் தேவைகள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில் சிகரட் மற்றும் மதுபானம் ஆகிய வற்றில் அவர்களின் அதிகம் நாட்டம் காணப்படவில்லை எனவும், நகரங்களில், தெருக்களில் வீதி வரை படங்களுக்கான தேவை, போக்குவரத்து வசதி போன்றவையே அவர்களின் அதிகபடியான தேவையாக உள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சிகரெட் மற்றும் மதுபானம் ஆகியவற்றின் விலை அதிகரிப்பால் நாட்டின் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும் என அது சம்பந்தப்பட்டவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும், சிகரெட்டுக்கு விதிக்கப்படும் வரியை அதிகரிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சிகரெட் மீதான வரிக் கொள்கை மாற்றப்பட வேண்டும். எமது நாட்டில் கிடைக்கும் வருமானத்தை வேறு நாடுகள் சுரண்டிச் செல்வதற்கு இடமளிக்க கூடாது. – என்றார்.

அதிபடியான வரி ஈட்டிக்கொள்வதால் நாட்டில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பதற்கு ஏனைய நாடுகளிடம் கடன் வாங்க வேண்டிய தேவை இருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022



'கூட்டுப் பறவைகளின் கூக்குரலோடு வீழும் கானகத்தின் மரண ஓலம் மலைகளில் முட்டும் வானம் எட்டும் காதுக்குக் கேட்காது கடைசி மட்டும்.'

- கவிஞர் இன்குலாப் -

# துயிலும் இல்லங்களுக்குச் சென்று விளக்கேற்ற முடியாதவர்கள் இல்லங்களில் விளக்கேற்றுங்கள்!

## தர்மலிங்கம் சுரேஷ் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு வாகரை, மாவடிமுன்மாரி, தரவை, தாண்டியடி ஆகிய 4 துயிலும் இல்லங்களில் எதிர்வரும் 27 ஆம் திகதி சென்று விளக்கு ஏற்றுவதற்காக போக்குவரத்து உட்பட அனைத்து நடவடிக்கைகளும் செய்யப்பட்டுள்ளன.

எனவே துயிலும் இல்லங்களுக்குச் சென்று விளக்கேற்ற முடியாதவர்கள் தங்களது இல்லங்களில் குறித்த நேரத்திற்கு விளக்கேற்றுமாறு உரிமையுடன் கேட்டுக்கொள்கிறேன் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாவடிமுன்மாரி துயிலுமில்ல இரண்டாம் கட்ட துப்புரவுப்பணிகள் ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டளர்களால் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தரவை, வாகரை (கண்டலடி), மாவடிமுன்மாரி மற்றும் தாண்டியடி துயிலும் இல்லங்களில் ஆரம்பக்கட்ட துப்புரவுப்பணிகள் முன்னணியின் செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் இரண்டாம் கட்ட துப்புரவு பணி மக்களின் பங்களிப்புடனும் நடைபெற்று வருகின்றது.

இதனடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தின் நிலப்பகுதி எமது இளைஞர்களின் பங்களிப்புடன் உழவு இயந்திரம் மூலம் உழுது சுத்தம் செய்யப்பட்டதுடன் மாவட்டத்திலுள்ள 4 மாவீர் துயிலும் இல்லங்களில் 27 ஆம் திகதி மாலை 6.05 விளக்கு ஏற்றி நினைவு கூருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளமையுடன், துயிலும் இல்லங்களுக்கு செல்வதற்காக போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.



எனவே 27ஆம் திகதி துயிலும் இல்லங்களுக்கும் செல்லமுடியாதவர்கள் அவர்களது வீட்டில் குறித்த நேரத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சிறுமியின் முகநூல் கணக்கைத் திருடி அதே சிறுமியை விற்பனைக்கு விளம்பரப்படுத்திய நபர்மீது விசாரணை!

17 வயது சிறுமியின் முகநூல் கணக்கை திருடி, அந்தக் கணக்கின் ஊடாக சிறுமியை விற்பனைக்கு விளம்பரப்படுத்தி சமூகமயப்படுத்தினார் எனக் கூறப்படும் தொலைபேசி பழுதுபார்ப்பவர் தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் தனது வீட்டுக்கு அருகில் வசிக்கும் தொலைபேசி பழுதுபார்ப்பவரிடம் தனது தொலைபேசியை பழுதுபார்ப்பதற்கு சிறுமி கொடுத்தார் எனவும், சில மணித்தியாலங்களின் பின்னர் அதனைப் பழுதுபார்த்து தன்னிடம் கொடுத்தார் எனவும் சிறுமி செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் தனது கைத்தொலைபேசியை சோதித்தபோது கையடக்கத் தொலைபேசியிலிருந்து தனது முகநூல் கணக்கு மற்றும் மின்னஞ்சல் முகவரி நீக்கப்பட்டிருந்தமையால் மீண்டும் அந்த நபரிடம் கூறி புதிய முகநூல் கணக்கு ஒன்றை செயற்படுத்தினார் எனவும் குற்றம் சாட்டப்பட்டவரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு நாள்களுக்குப் பின்னர் பல நண்பர்கள் அந்தச் சிறுமியை தொலைபேசியில் அழைத்து, 'என்ன செய்கிறீர்கள், பைத்தியக்காரத்தனமான காரியங்களைச் செய்யாதீர்கள்' என்று கூறியபோதே தனது முகநூல் கணக்கு இவ்வாறு திருடப்பட்டமை தெரியவந்ததாகவும் அந்தச் சிறுமி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

# குரங்கம்மை நோயாளிகளுக்கு தேசிய தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவில் சிகிச்சையளிப்பு!

இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள குரங்கம்மை நோயாளிகளுக்கு தேசிய தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவில் சிகிச்சையளிக்கப்படவுள்ளது.

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவுவின் பணிப்பாளர் வைத்தியர் ஹசித அத்தநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை இலங்கையில் குரங்கம்மை நோயால் பாதிக்கப்பட்ட இரண்டு பேர் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை இவர்கள் டுபாயிலிருந்து இலங்கை வந்தவர்கள் எனவும் அவர் கூறினார்.

மேலும் குரங்கம்மை நோய்க்கான அறிகுறிகளை இலகுவாக அடையாளம் காண முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்கள் சீரழிந்த அடிப்படை வசதிகள்கோரி போராட்டம்






சீரழிந்துள்ள அடிப்படை வசதிகள் கோரி ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்கள் போராட்டம் ஒன்றை நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்கள் மேற்படி போராட்டத்தில் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் ஈடுபட்டனர்.

மலசலகூடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நீண்ட காலமாக சீர் செய்யப்படாத நிலையில் போராட்டம் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனத்திலிருந்து போராட்டத்தை ஆரம்பித்த மாணவர்கள் ஏ – 9 வீதிவரை சென்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

தொடர்ந்து மீண்டும் தொழிற்பயிற்சி நிறுவனம் வரை சென்று பிரதான வாயிலை மறித்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நிர்வாகம் சீர் செய்தல், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிறுவன அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இதன் போது, மேற்படி பிரச்சினை தொடர்பாக நிறுவனத்தின் பணிப்பாளரும் அதிபருமான ஜி.தர்மநாதன் குறிப்பிடுகையில் –

சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் உரிய தரப்புடனும், அமைச்சுடனும் பேசியுள்ளேன் எனவும், சீர் செய்யப்படும்வரை, வீடுகளில் இருந்து டிஜிற்றல் தொழில்நுட்பம் ஊடாக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர்களுக்குத் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ‘உள்ளக்கிடங்கு’ சிறுகதை வெளியீடு!

யாழ்ப்பாணம், நவ. 15

தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டில் பயிலும் மாணவியான ஆர்த்திகா சுவேந்திரனின் ‘உள்ளக்கிடங்கு’ சிறுகதை தொகுதியானது திருகோணமலை ‘அன்பின் பாதையின் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின்’ ஏற்பாட்டில் இலட்சுமி பிரசுரத்துடன் இணைந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் வெளியீடு மற்றும் அறிமுகம் என்பன கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு, எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக. தீபகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், இந்நிகழ்விற்கு முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் கலந்து சிறப்பிப்பதோடு, சிறப்பு அழைப்பாளர்களாக கவிஞர் மூதூர் முகைதீன் மற்றும் சட்டத்தரணி செல்வி ஐஸ்வர்யா சிவகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.






இந்த நிகழ்விற்கு கலை இலக்கிய ஆர்வலர்களை கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டியுள்ளனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# இந்தியா அமைதியை விரும்பும் நாடு; ஆனால் ஆத்திரமூட்டப்பட்டால் தகுந்த பதிலடி தரும்!

## பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் சூளுரை





இந்தியா அமைதியை நம்புகிறது, விரும்புகிறது. ஆனால் தூண்டப்பட்டால், ஆத்திரமூட்டப்பட்டால், அந்த நாடு தகுந்த பதிலடி கொடுக்கப் பின்நிற்காது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஞாயிற்றுக்கிழமை கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை ஹரியானா மாநிலம் ஜஜ்ஜாரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பாதுகாப்பு அமைச்சர் உரையாற்றினார் எனப் பாதுகாப்பு அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இனிப் பலவீனமாக இல்லை. நாங்கள் அமைதியை நம்புகிறோம். ஆனால் யாராவது நமக்கு தீங்கு விளைவிக்க முயன்றால், நாங்கள் தக்க பதிலடி கொடுப்போம்.எங்கள் வீரர்கள் அதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளனர். கல்வான் பள்ளத்தாக்கு சம்பவத்தின் போது எங்கள் திறமை, வலிமை மற்றும் தயார் நிலை இதற்குச் சான்றாகும் என்று சிங் கூறினார்.

இந்தியாவின் மீது தீய பார்வையை செலுத்தும் எவருக்கும் தகுந்த பதிலடி கொடுக்க ஆயுதப்படைகள் முழுமையாக தயார் நிலையில் இருப்பதாக சிங் நாட்டு மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

நவம்பர் 13, 2022 அன்று ஹரியானா மாநிலம் ஜஜ்ஜாரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்திற்கு தேசிய நலன்களைப் பாதுகாப்பதே பிரதான நோக்கமாக உள்ளது என்றார்.

இராணுவம் அதிநவீன மற்றும் உள்நாட்டிலேயே அபிவிருத்தி செய்யப்பட்ட ஆயுதங்களைக் கொண்டுள்ளது, எதிர்கால சவால்களில் இருந்து நாட்டைப் பாதுகாக்க ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை அது சுவீகரித்துள்ளது என்றும் அவர் வலியுறுத்திக் குறிப்பிட்டார்.

இந்தியாவின் உலகளாவிய பிம்பத்தை, வெறும் கேட்பவர் என்ற நிலையிலிருந்து வலியுறுத்தும் நபராக மாற்றியமைக்காக பிரதமரை பாதுகாப்பு அமைச்சர் பாராட்டினார். உலகம் இப்போது புதுடில்லியை ஆர்வத்துடன் கேட்கிறது என்று அவர் கூறினார்.

அரசாங்கத்தின் முயற்சியால் இந்தியா இப்போது உலகின் முதல் ஐந்து பொருளாதாரங்களில் ஒன்றாக உள்ளது என்பதை எடுத்துக்காட்டிய அவர், வரும் காலங்களில் நாடு முதல் மூன்று இடங்களுக்குள் வரும் என்று நம்புகிறார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், பிருத்விராஜ் சவுகான் மற்றும் மராட்டிய வீரர் சத்ரபதி சிவாஜி போன்ற புரட்சியாளர்களிடமிருந்து உத்வேகம் பெற்று, இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாத்து, இந்தியாவின் அபிலாஷைகளை நனவாக்க அரசாங்கம் உழைத்து வருகிறது என்றும் சிங் வலியுறுத்தினார்.

இந்த ஆண்டு செங்கோட்டையின் அரண்மனைகளில் இருந்து தனது சுதந்திர தின உரையின் போது பிரதமரால் கற்பனை செய்யப்பட்ட 'புதிய இந்தியா' என்ற உறுதியான 'அமிர்த காலின் பஞ்ச் பிரான்' பற்றி அவர் தொட்டுப் பேசினார்

காலனித்துவ மனநிலையிலிருந்து விடுபட, ராஜ்பாத்தின் பெயரை கர்தவ்ய பாதை என மாற்றுவது உட்பட பல முயற்சிகளை அரசாங்கம் எடுத்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

இந்தியா கேட் வளாகத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிரமாண்ட சிலை நிறுவுதல்,மராட்டியப் போர்வீரன் சத்ரபதி சிவாஜியிடமிருந்து ஈர்க்கப்பட்ட ஒரு புதிய இந்தியக் கடற்படைக் கொடி மற்றும் சுமார் 1,500 காலாவதியான பிரிட்டிஷ் காலச் சட்டங்களை நீக்கியது போன்றவற்றை அவர் சுட்டினார்.

2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஜி - 20 தலைவர் பதவிக்கான சின்னத்தில் தாமரை மலர் இருப்பது குறித்த சில தரப்பினரின் கருத்தை சிங் நிராகரித்தார்.

இது சமீபத்தில் பிரதமரால் தொடங்கப்பட்டது. இந்தியாவின் கலாச்சார அடையாளத்துடன் இணைந்த தேசிய மலர் தாமரை என்றார் பாதுகாப்பு அமைச்சர்.

ஜஜ்ஜாரில் ராணுவ மந்திரி பிருத்விராஜ் சவுகானின் சிலைய அவர் திறந்து வைத்தார். அவர் பிருத்விராஜ் சவுகானை ஒரு சிறந்த ஆட்சியாளர் என்று குறிப்பிட்டார். அவர் ஒரு பெரிய நிலப்பரப்பில் ஆட்சி செய்தவர் மட்டுமல்லாமல், தைரியம், நீதி மற்றும் பொது நலன் ஆகியவற்றின் உருவகமாகவும் இருந்தார் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் ஹரியானா முதல்வர் மனோகர் லால் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.


(மூலம்:ஏ.என்.ஐ.)

# சயனைடை விட 6,000 மடங்கு ஆற்றல் வாய்ந்த நச்சுத் தாவரம்

## இங்கிலாந்தின் பூங்காவில் வளர்ப்பு







ஆமணக்கு வகையைச் சேர்ந்த ரிசினஸ் கம்யூனிஸ் என்றழைக்கப்படும் செடி, உலகின் 'கொடிய' விஷமுள்ள தாவரமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் செடியில் உள்ள சில பொருட்கள் கொடிய சயனைடை விட 6,000 மடங்கு ஆற்றல் வாய்ந்தவை. உலகின் மிக நச்சு தாவரம் என்று கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், இங்கிலாந்தின் கோல்வின் பேவில் உள்ள குயின் கார்டன்ஸ் பூங்காவில் 'ரிசினஸ் கம்யூனிஸ்' செடி இருப்பது தெரியவந்துள்ளது.

குயின் கார்டன்ஸ் பூங்காவில் வளர்க்கப்படும் செடிகளுக்கு நடுவே அசாதாரணமான புதிய வகை செடி இருப்பதை அங்குள்ள ஒரு பெண்மணி கண்டார். உடனே அவர் அங்குள்ள பணியாளர்களிடம் இது குறித்து கேட்டுள்ளார். அவர்கள் இதை ஆமணக்கு செடி எனக் கூறியுள்ளனர்.அந்த பெண் செடியை தனது மொபைல் கமராவில் படம்பிடித்து இணையத்தில் அதை குறித்த தகவல்களை பார்த்துள்ளார். அதன் பின் தன்னுடைய கணவருக்கும் அந்த தகவல்களை பகிர்ந்துள்ளார். அதன் பின் அவருடைய கணவர் இந்த செடியில் உள்ள ஆபத்தை கண்டு அதிர்ச்சியடைந்தார். இந்த தாவரங்களை கையுறைகளால் கையாள வேண்டும், அவற்றின் விதைகள் மற்றும் விதைகளின் நுகர்வு மிகவும் ஆபத்தானது என்று அவர் கூறினார். பொதுமக்கள், குழந்தைகள் செல்லப்பிராணிகள் உலா வரும் பூங்காவில் இத்தகைய விஷச்செடி இருப்பது ஆபத்து என்பதை உணர்ந்துகொண்டார். பின் அதை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த செடி இருக்கும் பகுதியில் எச்சரிக்கை பலகை வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

# மக்கள் மனங்களில் வாரியார் என்றுமே வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண், ஆஸ்திரேலியா**




**இன்று அவரது குருபூசை தினமாகும்**

வீணை படித்திருந்தால் வித்துவானாய் மேடைகளில் இசை நிகழ்ச்சிகள் செய்தபடியே தான் இருந்திருக்க வேண்டி வந்திருக்கும். ஆனால் இறைவனின் ஆணை வேறாக இருந்ததால் பாதை மாறியது. பயணமும் மாறியது.சைவமும் தமிழும் கைபிடித்து நின்றது. கலியுகத் தெய்வம் கந்தப் பெருமான் தன்னுடைய கடைக்கண் பார்வையில் வைத்திருக்கும் நிலையும் உருவாகியது. இப்படி யெல்லாம் யாருக்கு நேர்ந்தது என்று எண்ணிடத் தோன்றுகிறதல்லவா! வேறு யாருமல்ல பேச்சாலும், எழுத்தாலும், கதைகளாலும், இசையாலும், எம் மையெல்லாம் தன்பக்கம் ஈர்த்து நின்ற வாரியார் சுவாமிகளே!

கிருபானந்த வாரியார் என்னும் பெயரினை நாங்கள் சாதாரண மாகவே பார்க்கிறோம். அந்தப் பெயருடன் சுவாமிகள் என்பதையும் சேர்த்து அழைத்து விட்டு அத்துடன் நின்று விடுகிறோம். ஆனால் அந்தப் பெயரின் அர்த்தத்தை நாங்கள் எவருமே எண்ணியே பார்ப்ப தில்லை. 'கிருபை' என்றால் 'கருணை' ஆனந்தம் 'இன்பம்' வாரி ' என்றால் பெருங்கடல் இப்பொழுது – கிருபானந்த வாரியார் என்னும் பெயரினை எண்ணிப் பாருங்கள். மலைப்பாக இருக்கிற தல்லவா! இவருக்கு இப்பெயர் கருவிலேதான் உருவாகி இருக்க வேண்டும் என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது.கருணையே உருவமாகக் கொண்டே அவர் விளங்கினார். கருணை உருவில் இருந்தே பிரசங்களை ஆற்றினார். அனைவரையும் கட்டிப் போட்டார். கருத்துக்களை வழங்குவதில் கடலாகாவே இருந்தார். அவரின் செய்கைகள் அத்த னைக்கும் ஏற்றதாக அவரின் பெயரும் அமைந்து வந்திருக்கிறத ல்லவா! இதைத்தான் – 'நினையாது முன்வந்து நிற்கினும் நிற்கும் – எனையாளும் ஈசன் செயல்' என்பதா!

திருவருட்செல்வர்களாக இருந்தவர்களைப் போற்றி தெய்வத் தமிழ்ச் சேக்கிழார் பெருமானால் பெரியபுராணம் பாடப்பட்டது. அந்தப் புராணத்தின் நாயகர்கள் அறுபத்து மூவர் ஆவர். அனைவ ருமே ஆண்டவனுக்குப் பலவிதத்தில் தொண்டாற்றியவர்களாகவே இருக்கிறார்கள். அறுபத்து மூவருடன் நின்று விடாமல் அந்த எண்ணி க்கையில் வாரியார் சுவாமிகளுக்கும் இடம் இருக்கிறது என்னும் சிந்தனையைப் பலரும் சொல்லுவதைக் கேட்கக் கூடியதாக இருக்கிறது. ஆகையால் வாரியார் சுவாமிகளையும் சேர்த்து திருவருட் செல்வர்கள் அறுபத்து நான்கு என்று அழைப்போமா! உடன் படுவீர்கள் என்று எண்ணுகிறேன். பத்தொன்பது வயதில் இல்லறத்தினுள் இணைகின்றார். அவருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. இளமையில் இல்லறத்தில் இணைந்தவர் – சிற்றின்பக் கடலி னுள் மூழ்கிவிட நாட்டங் கொண்டவராய் இருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் இல்லறத்தை நல்லறமாகவே கருதி – மனைவி இருந்த போதும் – சிற்றின்பம் என்பதை மறந்து – இல்லறத்திலே ஒரு துறவியாகவே வாழ்ந்தார் என்பதை மனமிருத்தல், அவசியமா கும்.இப்படி இருப்பதுதான் உண்மையான துறவாகும். பொருள்கள் வந்து குவிந்தாலும் – அருளின் வசமே அவரின் மனம் இருந்த காரணத்தால் – இல்லற ஞானியாகவே வாரியார் சுவாமிகள் விளங்கினார் என்பதுதான் அவரின் தனித்துவத்தைக் காட்டி நிற்கிறது எனலாம்.

இப்பொழுது – காணுமிடமெல்லாம் பல அமைப்புகள். ஒவ்வொரு அமைப்புக்கும் ஒவ்வொரு தலைவர். ஒவ்வொரு தலைவருமே தம்மைச் சாமியார் என்று முத்திரை குத்திக் கொண்டு – செய்யக்கூடாத அத்தனை இழிவான காரியங்களையும் செய்கிறார்கள். ஏமாற்றிப் பிழைக்கின்றார்கள். அவர்களுக்கு என்று தரகர் கூட்டமோ இன்னொரு பக்கம். பொருள் குவிகிறது. அருள் அறுகிறது. ஆடம்பரம் தலைவிரித்து ஆடுகிறது. அங்கு சென்று அகப்பட்டு அல்லல் படுகிறார்கள் அநேகம் பேர்! இப்படி ஏமாற்றிப் பிழைப் பவர்களை சுவாமிகள் என்று அழைப்பது எத்தகைய மதியீனம்? மனைவி இருந்தும் – இல்லறத்தை துறவறமாக்கி வாழ்ந்த வாரியாரைத்தான் சுவாமிகள் என்று அழைப்பது மிகவும் பொருத்தமாய் இருக்கிறதல்லவா! பசித்திரு,தனித்திரு, விழித்திரு என்பதை வாரியார் சுவாமிகள் நன்கு உணர்ந்தவர். அதனால் அவர் எல்லா வற்றிலும் விழித்தே இருந்தார்.

பள்ளிக்கூடத்தைத் தொட்டிராதவர் வாரியார். நிழலுக்கும் அந்தப் பக்கம் போகாதவர் வாரியார். அவரைப் பல்கலைக் கழகங்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் பாராட்டிக் கௌரவித்தார்கள். பல்கலைக்கழகங்கள் வாரியாரை வரவழைத்து அவரின் உரைகளை – கற்றிடும் மாணவரையும், பேராசிரியர்களையும் கேட்கவைத்த நிலையினை எண்ணிப் பார்க்கையில் யாவும் இறையின் திருவருள் என்றுதானே எண்ண வேண்டும்.பள்ளிக்குச் சென்று சாதாரண கல்வியினைக் கற்காதவர், புராணங்களையும், இதி காசங்களையும், வேதக் கருத்துக்களையும், சைவசித்தாந்தக் கருத்துக்களையும், தமிழ் இலக்கிய, இலக்கண மரபுகளையும் எப்படித் துன்னுள் தேக்கி வைத்திருந்தார் என்று நினைத்துப் பார்க்கவே பெரும் வியப்பாக இருக்கிறதல்லவா !

மூன்று வயதில் வாரியாரின் வித்தியாரம்பம் ஆரம்பிக்கிறது. தந்தைதான் அவரின் ஆத்மார்த்த குரு. ஐந்து வயதாக இருக்கும் பொழுதே ஏட்டினைப் படிக்கும் அளவுக்கு கற்றலில் முன்னிற்கிறார். எட்டு வயதில் வெண்பா பாடும் அளவுக்கு துலங்கி நிற்கிறார். பாக்களிலே வெண்பா பாடுவது என்பது மிகவும் கடினமானது. சட்ட, திட்டங்களுடன் பாடப்பட வேண்டிய யாப்பினைக் கொண்டது தான் வெண்பா. அப்படியான வெண்பாவினை எட்டு வயதில் வாரியார் பாடினார் என்றால் வாணி அவர் நாவில் அமர்ந்து விட்டாள் என்று தானே எண்ணிட வைக்கிறதல்லவா! அத்துடன் அவரின் ஆற்றல் நின்று விட வில்லை. தன்னுடைய பன்னிரெண்டாவது வயதிலே பன்னிரெண்டாயிரம் பாடல்களையே மனனம்செய்திருக்கிறார் என்றால் நம்புவீர்களா? ஆம் .... இது வெறும் புகழ்ச்சி அல்ல! இது உண்மை! இப்படி ஒரு பிள்ளை வளர்ந்து வந்ததென்றால் அதற்குப் பின்னால் அந்த ஆண்டவனும் கூடவே வந்திருக்கிறான். எந்த நேரமும் அந்தப் பிள்ளையை அரவணைத்த படியே இருந்திருக்கிறான் என்பதுதானே அர்த்தமாகும். இதைத்தான் கருவிலே திருவுடையார் என்றார்கள்.

இவன் தந்தை என்நோற்றான் என்னும் நிலையில் வாரியார் பிள்ளையாய் வாய்த்திருக்கிறார். நோற்றான் என்றால் நோன்பு இருந்தான் என்பதுதான் அர்த்தமாகும். வாரியார் தந்தையார் மல்லையாதசர் அந்தப் பரம்பொருளை வேண்டி பக்தி சிரத்தையுடன் நோன்பு நோற்ற காரணத்தால்த்தான் – வாரியார் ஒளி விட்டுப் பிரகாசித்தார் என்பது பொருத்தமாய் இருக்கிறதல்லவா! வள்ளுவம் காட்டுகின்ற,

**தந்தை மகற்காற்று நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்**

**மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்எனும் சொல்**

இந்த மொழி – வாரியாருக்கும் அவரின் தந்தையாருக்கும் எத்துணை பொருத்தமாய் அமைகிறது பாருங்கள் !

வேத நெறி தளைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப்பிள்ளை ஞானப்பால் உண்ட பிள்ளை. அந்தப்பிள்ளை தன்னை நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் என்றது. இன்னுமொரு பெரியவர் தமிழோடு இசை பாட மறந்தறியேன் என்றார். அப்பெரியார்தான் அப்பர். இந்தத் திருவடியார்கள் வழியில் பயணத்தை ஆரம்பிக்கிறார் எங்கள் வாரியார் சுவாமிகளும். அவரும் தமிழையும் இசையையும் துணையாகக் கொள்ளுகிறார். திருவடியார்கள் ஊர்கள் தோறும் சென்று இறைவனைப் பாடிப் பரவி மக்களை ஆன்மீகத்துக்குள் வரச்செய்தார்கள் . எங்கள் வாரியார் சுவாமிகளும் ஊர் ஊராய், நாடு நாடாய் சென்று சன்மார்க்கத்தை நன் மார்க்கமாய் காட்டி நிற்கிறார். ஆதலால் அறுபத்து நான்காவது திருவடியார் என்று அழைப்பது மிகவும் பொருத்தமாய் இருக்கிறது அல்லவா.

நல்லைநகர் தந்த நாவலர் பெருமான் சொன்னபடியே செய்தார். சொல்லிவிட்டு மட்டும் நின்று விடவில்லை.நாவலர் பெருமான் ஈழத்தின் ஞானவிளக்கு.தமிழையும், சைவத்தையும் தன்னுடைய இரு கண்களாகவே அவர் கருதிச் செயற்பட்டார். பொருளைவிட அருளையே அவர் பெரிதும் நம்பினார் – துணையாக்கினார். அவரும் எழுதினார். பேசினார். புராணங்களையெல்லாம் பக்தி சிரத்தையுடன் கையிலெடுத்தார். விளக்கினார்.அவரை இன்றும் நினைக்கிறோம். என்றுமே நினைத்துக் கொண்டே இருப்போம்.

அவரின் வழியில் வாரியாரையும் பார்ப்பது பொருத்தமாய் இருக்கும் என்று கருதுகிறேன். நாவலர் பெருமான் ஆசார அனுட்டானங்களைச் சொல்லி விட்டுப் போகாமல் தானும் அதன் வழி மிகவும் இறுக்கமாகவே நின்றார். வாரியாரும் தன் வாழ்நாள் எல்லாம் ஆசார அனுட்டானங்களைக் கைவிடாதவராகவே வாழ்ந்தார். நீறில்லா நெற்றி பாழ் என்னும் தமிழ் மூதாட்டியின் வார்த்தைகளை இருவருமே வாழ்வெல்லாம் போற்றி நின்றார்கள். நாவலர் பெருமானின் படங்கள் அத்தனையும் நெற்றியில் நிறைந்த திருநீற்றின் மூன்று குறிகளுடனேயே காணப்படும். வாரியார் என்றதும் அவரின் திருநீறு நிறைந்த அகன்ற நெற்றியே ஒளி விட்டு மனத்தில் வந்து நிற்கும். கூடாதது அத்தனையும் கூடாதது என்று எண்ணியே இருவரும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை மனமிருத்துவது சாலப் பொருந்தும் என்று கருதுகிறேன்.

நாவலர் பெருமான் சிவதீட்சை பெற்றிருந்தார். விபூதி உருத்திராக்கத்தை உயிராகப் போற்றிக் காத்துவந்தார். வாரியாருக்கு ஐந்து வயதிலே திருவண்ணாமலை பாணிபத்ர மடத்தில் சிவலிங்க தாரணம் நடத்தப்பட்டது.அத்துடன் இவரின் தந்தையாரால் சடார மந்திரமும் உபதேசிக்கப்பட்டது. தந்தையாரின் உபதேசத்துடன் மதுரை திருப்புகழ் சுவாமியினால் சூட்சும சடார மந்திரமும் உப தேசிக்கப்பட்டது.அது மட்டுமன்றி வாரியாரின் கனவில் பாம்பன் சுவாமிகள் தோன்றி சடார மந்திரத்தை திரும்பவும் உபதேசித்தார் என்றும் அறிய முடிகிறது. நாவலர் பெருமான் கால் பட்ட இடங்களெல்லாம் வாரியாரின் கால்களும் பட்டிருக்கின்றன. நாவலரின் சிந்தனைகள் பரவிய இடமெல்லாம் வாரியாரும் சென்று தன்னுடைய சிந்தனைகளைப் பரப்பினார் என்பதும் நோக்கத்தக்கது. நாவலர் பிரமச்சாரியத்தை மேற்கொண்டார். வாரியார் இல்லறத்தில் இருந்து கொண்டே பிரமச்சரியத்தை மேற்கொண்டு வந்தார் என்பதும் கருத்திருத்த வேண்டியதே. நாவலரை இலங்கை அரசாங்கம் கௌரவித்து முத்திரை வெளியிட்டது. வாரியாரை இந்திய அரசாங்கம் கௌரவித்து முத்திரை வெளியிட்டது, சைவத்தையும், தமிழையும் காத்தவர்களை நாடும் போற்றியது. நாட்டு அரசாங்கங்களும் போற்றியது.

நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களையும், ஐந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் வாரியார் சுவாமிகள் சமுதாயம் பயனுறும் வகையில் வழங்கி இருக்கிறார்.அவரின் நூல்கள் பல பதிப்புக்களைத் தொட்டு யாவர்மத்தியிலும் சென்று இன்றும் வாழ்ந்து கொண்டே இருக்கிறது. எதனை எழுதினாலும் அதனை யாவரும் விளங்கும்படியே எழுதுவார். இராமாயாணம் பற்றி எழுதினார். பாரதம் பற்றி எழுதினார். கந்தபுராணம் பற்றி கற்றவரும் மற்றவரும் விளங்கும் வகையில் கந்தவேல் கருணை என்னும் மகுடத்தில் எழுதினார்.பெரிய புராணத்தை யாவரது மனதில் பதியும் வகையில் தனக்கே உரித்தான தமிழ் நடையில் சிவனருட்செல்வர் என்னும் பெயரில் வழங்கினார். யாருமே தொட முடியாத ஒரு பெரும் எழுத்துப் பணியினை இவர் மேற்கொண்டார். அதுதான் வாக்குக்கு அருணகிரி என்று போற்றப்படும் அருணகிரியின் ஆன்மீகப் பனுவல் திருப்புகழ் தொடர்பான பணியாகும். வேலூர் மாவட்டத்தில் பிறந்ததால் வேலவன் வசமானார். காங்கேய நல்லூரில் பிறந்ததால் காங்கேயப் பெருமான் திருவடியைப் பற்றினார். அந்தக் காங்கேயனின் அருள் பெற்ற அருணகிரியின் திருப்புகழ் பாடல்கள் வாரியாரை வசப்படுத்தின. முத்தைத்தரு என்று எம்பெருமான் கந்தப் பெருமானால் அடியெடுத்துக்கொடுத்த திருப்புகழ் என்னும் அமுதத்தை தான் மட்டும் பருகினால் போதாது என்று கருதினார் வாரியார். அதனால் ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்து ஆறாம் ஆண்டில் திருப்புகழ் அமிர்தம் என்னும் மாத இதழைத் தொடங்கினார். அவரின் பல வேலைகளுக்கு மத்தியிலும் விட்டு விடாமல் முப்பத்து ஏழு ஆண்டுகள் அந்த மாத இதழை நடத்தி – எழுத்துப் பணியில் ஆன்மீக முத்திரையினைப் பதித்திட்டார் எங்களின் வாரியார் சுவாமிகள் பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை என்று அவரின் எழுத்து ஆளுமை அத்தனையும் திருப்புகழ் அமிர்தம் தாங்கிச் சிறப்புற்று நின்றது. தமிழிலே சந்தம் சிந்தும் பாடல்கள் என்றால் அது திருப்புகழ் மட்டுமே. அந்தச் சிந்துகளில் தனது சிந்தனைகளை வெளிப்படுத்திய வாரியாரும் ஒரு அருணகிரிதானே!

பெண்களைப் பெரிதும் மதித்தார். குழந்தைகளைக் கொண்டாடியே மகிழ்ந்தார். அவரின் ஒவ்வொரு பிரசங்கத்திலும் முன்னே இருப்பவர்கள் நிச்சயமாகக் குழந்தைகளாகவே இருப்பர்.இசையுடன் இணைந்த அவரின் பிரசங்கம் கேட்பவர்களை எங்குமே அசைய விடாமல் ஆக் கியேவிடும்.வளர்ந்து வருகின்ற குழந்தைகளிடம் நன்னெறியைப் புகு த்த வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார் வாரியார் எனலாம். இதனால் தன்னுடைய பிரசங்க மேடையின் முன் அமர்ந்திருக்கும் – குழந்தைகளிடம் பல வினாக்களைக் கேட்டு – அதற்குப் பதில் அளித்த குழந்தைகளை மேடைக்கு வரவழைத்து நல்ல நூல் களை வழங்கி ஆசீர்வதித்தார். இந்த அணுகு முறை மிகவும் சிறப்பானது மட்டுமல்ல புதியதொரு அணுகு முறையாகவும் அமைந்தது என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளையும், பெண்களையும் மதிப்பவர்களை சமூகமும் என்னாளும் மதித்துக் கொண்டே இருக்கும். குழந்தை என்றாலே செல்வம்தான். பெண்கள் என்றாலும் செல்வம்தான். பெண்களை வீட்டின் மகாலக்சுமி என்றுதானே பார்க்கின்றோம். வாரியாருக்கு இந்த நுட்பம் மனதில் தோன்றிய படியால்த்தான் அவர் தன் வாழ்வெல்லாம் – பெண்களை மதித்தார். குழந்தைகளைக் கொண்டானார் எனலாம். இல்லாள் கருத்துடையது. இல்லான் எதுவுமே இல்லாதவன் என்று வாரியார் சுவாமிகளே சொல்லியிருக்கிறார்.

வாரியார் சுவாமிகளின் பிரசங்க உத்தியைப் பாராட்டியே ஆக வேண்டும்.தத்துவங்களைச் சொல்லுவார்.ஆனால் அவற்றை யாவரும் விளங்கும் வகையில் நல்ல கதைகள் மூலமாய் சொல்லுவார். அதாவது இனிப்புத் தடவிய மருந்து போல அவரின் கருத்துக்கள் வந்து அமையும். கதையினையும் நாடகப் பாணியிலேதான் சொல்லுவார். சொல்லும் பொழுது இசையும் அங்கே இணைந்து நிற்கும். தேவார, திருவாசக, திருமுறைப்

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 181

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## யார் சிரிப்பார்? தமிழ் மக்களை ரணிலா?

தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் என்ற பந்தை ஜனாதிபதி ரணில் உருட்டிய போதே, அது எப்படி முடிய வேண்டும் என்று கணித்தே அதனைச் செய்தார் என எண்ணினேன்.

தமிழ்க் கூட்டமைப்பில் இருக்கும் பிளவுகளையோ, தமிழ் மக்களின் பிற அரசியல் தரப்பினரிடம் உள்ள கருத்து வேற்றுமைகளையோ ரணில் அறியாதவர் அல்லர்.

உடனடியாகவே அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தமிழ் மக்கள் ஒற்றுமை



அ.தங்கத்துரை

யான தீர்வுத் திட்டம் ஒன்றை வைக்க வேண்டுமென ஊடகங்கள் மூலம் வெற்றிலை வைக்க, அதற்கு நேபாளத்திலிருந்து உடனடியாகவே தன்னிச்சைப்படி சமஷ்டிதான் தமிழ் மக்கள் அபிலாஷைப் படுகிறார்கள் என சுமந்திரன் பதிலடி தர, அதற்கு நீதியரசர் விக்னேஸ்வரன் வாழ்த்துத் தெரிவித்து, தமிழ்க் கட்சிகள் யாவும் ஒன்றுபட வேண்டிய காலம் வந்துவிட்டது என அறிக்கை தர, மறுகணமே அனந்தி சசிதரன் தான் இனி ஒருபோதும் நீதியரசரின் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதில்லை என பதில் அறிக்கை விளாச, இப்பொழுது தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் நீதியரசரைப் பற்றி பெரும் கொதிப்பில் இருக்கிறார் எனச் செய்திகள் வந்தன.

பேச்சு வார்த்தைகளுக்கு நாளும் நேரமும் வைக்கப்படும் முன்னரேயே, தமிழ் அரசியல் தரப்புகளின் ஒற்றுமையீனம், அர்ப்பணிப்புகள் பற்றி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோதராதலிங்கம் அவர்களது வவுனியா கூட்டத்தில் அவை பற்றி மகிமைப்படுத்தியமை ஊடகங்களில் தலைப்புச் செய்தியாகின்றன.

அதேபோல முன்னைய போராளிகளை வழி நடத்தியவர்கள், வழிநடத்துபவர்கள் என்ற சர்ச்சையின் விளக்கங்களும் ஊடகங்களில் முகப்பு செய்திகளாக, விகிதாசாரத் தேர்தல் இல்லாவிட்டால் விக்கி இன்று எம்.பியே இல்லை என்றும், தான் வெற்றி பெற்றிருப்பார் என்றும் தமிழரசின் சரவணபவன் கூறுவதும் வெளி வருகிறது.

இன்று நவம்பர் 15 ஐ.நா. உயர்மட்ட குழு ஒன்றுடன் பேச்சுவார்த்தை என்பதால், அந்தச்சமயத்தில் தமிழ் அரசியல் தரப்புகள் எல்லாவற்றையும் சமஷ்டித் தீர்வுக்கான சுருதி சேர்ப்பதற்கு சம்பந்தன் வீட்டில் கூடுமாறு சுமந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். தமிழ் மக்களுக்கான அரசியல் அபிலாஷைகளின் கட்டமைப்புகள் இப்படியானவை தான் எனின், ஆளுமையும் திராணிகளும் காரியங்களை ஒப்பேற்ற கூடியவர்களும் அந்தத் தரப்புகளில் கால் பதிப்பது வரவேற்கப்பட வேண்டும். அது தேவையும் கூட.

நாடாளுமன்றக் கதிரைகளுக்கே குறி வைத்து, தமிழர்களுக்காக அரசியல் பேசியவர்களும், தங்களுக்கென எந்தப் பிரதிபலன்களையும் எதிர்பாராது, முற்றும் முழுதாக தங்களை தமிழ் மக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்துக் கொண்டு போராடிய விடுதலைக் குழுக்களின் அங்கத்தினர்களுக்கும் இருந்த வேறுபாடுகளே இவைதான்.

ஒவ்வொரு காலத்திலும் ஆசனங்களுக்காக விதவிதமான காரணங்கள் உலாவும். வரலாறுகள் அவற்றைத் தாங்கி நிற்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னும் மும்முரமாக அடுத்த ஆண்டில் வந்த தேர்தல்களிலேயே குறியாய் இருந்தது.

வுனியாவில் செல்லத்தம்புவை விடுத்து, சிவசிதம்பரத்துக்கு நியமனம் தந்தால் அதுவரை அந்தத் தொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்திய செல்லத்தம்புவின் ஆதரவை இழக்க நேரிடும். ஆனால் சிவசிதம்பரத்துக்கு நியமனம் தரப்படாவிட்டால் தமிழரசுக்கும் தமிழ் காங்கிரஸுக்கும் இருந்த உறவுகள் பிளவு பட வழி இருந்தது.

அல்லது இருவருக்கும் நியமனம் தந்து பரீட்சை முடிவை பார்ப்பது மட்டக்களப்பில் ராஜதுரை – காசி ஆனந்தன் பேரில் என்ற மாதிரியாகி விடும்.

இருவரையும் சமாளிக்கவே கூட்டணியினர் ஜே.ஆருடன் முல்லைத்தீவுத் தொகுதியை ஏற்படுத்த இணங்கி, அதனை செல்லதம்புவுக்கும், வவுனியாவை சிவசிதம்பரத்திற்கும் தந்து இருவருமே வெற்றி பெற்று, தமிழீழக் கோரிக்கைகளுக்கு வலுவூட்டினார்கள்.

அதற்கு இன்னும் ஒரு இணக்கமும் இருந்தது. அது ஜே.ஆரின் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் முல்லைத்தீவில் அங்கத்தினர் ஒருவரைப் போட்டியிட வைக்க மாட்டாது என்பது. இவற்றுக்குப் பதிலாகக் கூட்டணி தந்த விலை மூதூரும் திருகோணமலையும் அம்பாறையும் ஆகும்.

அந்த நாள்களில் தேர்தல் மாவட்ட எல்லை வரையறுக்கும் ஆணைக்குழுவினர் (Delimitation Commission) இரண்டு அங்கத்தினர் பிரதிநிதித்துவம் கொண்ட மூதூரை, இரண்டு தொகுதிகளாகப் பிரித்து, மூதூரில் இருந்த பிரதான சிங்களப் பிரதேசங்கள், பகுதிகள் சேருவல தேர்தல் தொகுதிக்குள் அடக்கினர். எஞ்சிய பகுதிகள் மூதூர் ஒற்றை அங்கத்தவர் தொகுதி



வவுனியா சிவசிதம்பரம்

யானது.

மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த போது, அங்கு ஆகக்கூடிய வாக்காளர்களாக முஸ்லிம்களும், அடுத்துத் தமிழர்களும், மூன்றாவதாக சிங்களவர்களும் இருந்தனர். அதனால் இரண்டாவது ஆசனம் தமிழர்களுக்குக் கிட்டியது. ஆனால் அந்த இரட்டை அங்கத்தவர் தொகுதியை – மூதூர் ஒற்றை அங்கத்தவர் தொகுதியாகவும், சேருவல ஒற்றைய அங்கத்தவர் தொகுதியாகவும் –இரண்டாகப் பிரித்தபோது மூதூரில் முஸ்லிம்களும், சேருவலவில் சிங்களவர்களும் அதிக எண்ணிக்கையான வாக்காளர்கள் ஆகினர். ஆதலால் இரண்டு தொகுதிகளிலும் தமிழர்கள் இரண்டாவதாகி, வெல்லும் வாய்ப்பு அடிபட்டு போயிற்று. மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த போது இரண்டாவது பிரதிநிதித்துவம் தமிழருக்கு என்று இருந்ததை அந்தத் தொகுதியை இரண்டாக பிளவுபடுத்த தமிழர் கூட்டணி இணங்கி, இரண்டிலுமே தமிழர்களின் வாய்ப்பைப் பறி கொடுத்தனர்.

ஆக, திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைத் தேர்தல் தொகுதியில் மட்டும் ஓர் ஆசனத்தை பெறும் நிலமை வந்தது. அந்த மாவட்டத்தில் இர்ண்டு எம்.பிக்களைப் பெறும் வாய்ப்பைக் கொண்டிருந்த தமிழர்கள், இப்படி அந்த எல்லை நிர்ணயத்தின் மூலம் இரண்டாவது பிரதிநிதித்துவத்தை இழக்க கூட்டணியினரும் சேர்ந்து துணை போயினர்.

நம்புவதற்கு முடியாததானாலும், அப்போது மூதூரிலும், கிழக்கு மாகாணத்திலும் தீவிரமாக பணியாற்றிக் கொண்டிருந்த இளம் தலைவர்களான தங்கதுரை போன்றோரின் ஆட்சேபங்கங்களையும் பொருட்படுத்தாது, திருகோணமலையில் தமிழரது பிரதிநிதித்துவம் குறைவதை தமிழர் விடுதலைக் கூட்டணி பொருட்படுத்தவில்லை. தங்களின் நாடாளுமன்ற அரசியல் கதிரைகளே அவர்கள் கரிசனையாக இருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி சேருவல தேர்தல் தொகுதி நிறுவப்பட ஆதரவு தெரிவித்தது. இது தங்களது கட்சிகளிடையே இருந்த பிணக்கைத் தீர்த்து முல்லைத்தீவில் செல்லத்தம்புவை நிறுத்துவதற்கு வழிகள் தேடுவதற்காகவும் அவர்கள் அம்பாறையில் போட்டியிடவும் பொத்துவில் இரண்டு அங்கத்தவர் தொகுதியானது.

ஆக விடுதலைப் போரின் முடிவுக்குப் பின்னான இந்த 13 ஆண்டுகளிலும் நடந்தது விடுதலைக்கான அரசியல் அல்ல. நாடாளுமன்றத் தேர்தல் நியமனங்களுக்கும், அதில் எந்த வரிசைகளில் நிறுத்தப்பட்டால் வெற்றிச் சாத்தியங்கள் கூடும் என்பதும்தான். இவற்றுக்காகப் போடப்பட்ட தீர்வுகளின் சால்வைகளே அரசியல்வாதிகள் பேசும் தமிழ் மக்களின் விடிவு.

இந்த லட்சணங்களில் 75 வருட இணக்கப் பேச்சுக்களை சாமர்த்தியமாக இழுத்தடித்து, எதையுமே நிதர்சனமாகத் தராத பேரினவாதத்துடன் சம்பந்தன் தீர்வுக்காகக் காலவரையறை கேட்கிறார். தமிழ் மக்கள் சிரிப்பதா? ரணில் சிரிப்பதா?

விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகள் விடயத்தில் அக்கறை காட்டியிருந்த 'லைக்கா' சுபாஸ்கரன் தனது வர்த்தக முதலீடுகளினால் தற்சமயம் இங்கிலாந்தின் ஆளும் கட்சியான கொன்ஸர்வேட்டிவ் தரப்புக்கு பலவித நிதி உதவிகள் செய்து, இங்கிலாந்தின் இருதரப்பு அரசியலிலும்



முல்லைத்தீவு செல்லத்தம்பு

செல்வாக்குப் பெற்று, அதேபோல இந்திய திரைப்பட உலகிலும் கொடிகட்டிப் பறந்து, அங்கும் அரசியல்வாதிகளின் நட்புக்களை ஏற்படுத்தி, இப்பொழுது ஸ்ரீலங்கா தரப்பிலும் நிதர்சனமான அரசியல் அதிகாரங்களுக்குக் கால் பதிக்கிறார் எனப் பேசப்படுகிறது. தலைமைத்துவத்தில் வறண்டு கிடக்கும் தமிழ் மக்களுக்கு இது பேருதவியாய் இருக்கும் என்ற சிறிய ஆசைகள் எனது எண்ண அலைகளில் எழுந்தன. சுபாஸ்கரன் தனது பிரஜாவுரிமையை விட்டு, ஸ்ரீலங்கா நாடாளுமன்றப் பதவியை நாடுவார் என்றோ, பிரிவுகளுக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் கட்சிகளில் ஒன்றை ஆக்கிரமித்தோ, கைப்பற்றியோ தலைவராக ஆவார் என்றோ நான் நினைக்கவில்லை. தமிழ் மக்களில் அவர் காட்டும் ஆளுமைகளால் – அக்கறைகளால் – தமிழ் மக்கள் அடைந்து கொள்ளக் கூடியவற்றை கொண்டு தமிழ் மக்கள் மகிழ்ச்சி கொள்ள வேண்டும் என்ற எண்ணமே எழுந்தது.

கடல் பெரியதுதான். மகிழ்வை தருவது என்னவோ இப்படியான சிறு சிறு அலைகள்தான். இவை மகிழ்வு தரும் அலைகளாக இருக்குமா? அல்லது ஆர்ப்பரிக்குமா? – என்பதைப் பின்னர் பார்க்கலாம்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்க் கட்சிகள் வேற்றுமைகளை மறந்து ஜனாதிபதி ரணிலுடன் இணைய வேண்டும்!

## மஹிந்த 'அட்வைஸ்'



தேசிய பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினை களையும் தீர்க்க இந்த சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறவிடக்கூடாது என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ள அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் இந்த சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்பதோடு, வேற்றுமைகளை மறந்து ஜனாதிபதியுடன் உரையாற்ற வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அன்றும் சரி, இன்றும் சரி தேசிய பிரச்சி னைக்கான தீர்வு உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைக ளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் தாம் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






லண்டன் ஹரோ நகரின் முன்னாள் மேயர் சுரேஸ் கிருஸ்ணா மற்றும் முன்னாள் துணை மேயர் சசிகலா சுரேஸ் ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுர வீதியிலுள்ள ஈ.பி அக்கடமியின் CIMA கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்து இருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் அங்கு கல்வி பயிலும் மாணவர்களுடன் அவர்களின் எதிர்கால கல்விற்கான திட்டமிடல், வேலை வாய்ப்புகள், வெளிநாட்டு கல்வி, மற்றும் அவர்களுடைய தேர்வுகள் தொடர்பில் தமது அனுபவத்தின் ஊடாக கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

மேலும், நிகழ்ச்சியின் இறுதியில் பங்குபற்றிய மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வர்த்தகத் துறைமுகமாக தரமுயரும் காங்கேசன்துறை!

பிராந்திய கடல் வலயத்தில், இலங்கையை ஒரு பிர தான மையமாக மாற்றுவதையும், இந்தியா மற்றும் இலங்கைக்குமிடையேயுள்ள சுற்றுலாவை மேம்படுத்து வதையும் மையமாகக்கொண்ட, இலங்கையில் உள்ள துறைமுகங்களில் மிக முக்கியமான துறைமுகமான காங் கேசன்துறை துறைமுகத்தை வர்த்தக துறைமுகமாக மேம் படுத்தவும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தியா மற்றும் இலங்கை இடையே. இந்த திட்டம் EXIM வங்கியின் 4 கோடியே 50 லட்சத்து 27 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் நிதியின் கீழ் செயல்படுத் தப்படுகிறது, மேலும் இந்தத் திட்டத்தை செயல்படுத்தும் முகவர் இலங்கை துறைமுக அதிகாரசபை ஆகும்.

இதற்காக இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் திறைசேரிக்கும் இடையில் கடனுதவி ஒப்பந்தம் 2018 ஒக்ரோபர் மாதம் கைச்சாத்திடப்பட்டதுடன் டொலர் கடன் வரி ஒப்பந்தம் 2018 ஜனவரி 10 ஆம் திகதி கைச்சாத்திடப் பட்டது. இந்தியாவிலிருந்து நேரடியாகப் பொருள்கள் போக்குவரத்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப் பட்டுள்ளது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாவை மேம்படுத்துவது இதன் மற்றுமொரு நோக்க மாகும், மேலும் இது உள்நாட்டு துறைமுகங்களுக்கி டையில் பொருள்கள் போக்குவரத்து நடவடிக்கைகளைத் திறம்பட செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்பு டைய இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு தரப்பின ருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள திட்ட முகாமைத் துவ ஆலோசனை ஒப்பந்தத்தின் படி, இந்தத் திட்டத்துக் கான மொத்த திட்ட காலம் 39 மாதங்கள் ஆகும். அவற் றில், திட்டமிடல் காலம் ஒன்பது மாதங்கள், கட்டுமான காலம் 18 மாதங்கள் மற்றும் குறைபாடு உத்தரவாத காலம் 12 மாதங்கள் ஆகும்.

தற்போதுள்ள பிரேக்வாட்டரின் மறுசீரமைப்பு (1,400 மீ), தற்போதுள்ள பியர் எண். 1 (அளவு 96 மீ X 24 மீ) மறுசீரமைப்பு, பியர் எண். 2 (தற்போதுள்ள கம்பம் எண். 1 நீட்டிப்பு, அளவு 85 மீ X 24 மீ) மேலும் கடைசியாக, இந்த துறைமுகத்தின் முக்கிய அபிவிருத்திப் பணி பிரேக் வாட்டரில் கான்கிரீட் சாலை போன்ற உட்கட்டமைப்பை நிறைவு செய்தல் போன்ற 5 முக்கிய நடவடிக்கைகளை ஆகும்.

மேலும், காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அண மித்த 50 ஏக்கர் காணியை சுவீகரிக்க இலங்கை துறை முக அதிகார சபைக்கு (SLPA) முன்மொழிவுகள் சமர்ப் பிக்கப்பட்டுள்ளன. அதற்காக 15 ஏக்கர் பொது காணி மற்றும் 35 ஏக்கர் தனியார் காணயை சுவீகரிக்க அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தனியாருக்குச் சொந்தமான நிலம், நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் விதிகளின்படி குறிப்பிட்ட இழப்பீடு செலுத்தி கையகப்படுத் தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யூரியா உரம் தரையிறக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன

மலேசியாவிலிருந்து யூரியா உரத்தை ஏற்றி வந் துள்ள கப்பலிலிருந்து உரத்தை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

22 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை ஏற் றிய கப்பல் ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

பெரும்போக நெல் மற்றும் சோளச் செய்கைக்குத் தேவையான யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற் காக உலக வங்கியினூடாக பெற்றுக்கொடுக்கப்படும் 10 கோடியே 50 லட்சம் டொலர் நிதி வசதியின் கீழ் நாட்டை வந்தடைந்துள்ள இரண்டாவது கப்பல் இது வென விவசாய அமைச்சு தெரிவித்தது.

உலக வங்கியின் கடன் வசதியின் கீழ் பெரும் போகத்துக்காக 35 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம்கிடைத்துள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டது.

கடந்த சிறுபோகத்துக்காக இந்திய கடன் வசதி யின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 65 ஆயிரம் மெற் றிக் தொன் யூரியா உரத்தில் 34 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் மீதமிருப்பதாக விவசாய அமைச்சு தெரி வித்துள்ளது.

கையிருப்பிலுள்ள யூரியா உரத்தைப் பெரும்போக நெற்செய்கைக்காக நாடளாவிய ரீதியில் கமநல சேவைகள் திணைக்களத்துக்கு விநியோகிக்கப்பட் டுள்ளதாக விவசாய அமைச்சு கூறியது.

இதேவேளை, எதிர்வரும் 28 ஆம் திகதி யூரியா உரத்தை ஏற்றிய மற்றுமொரு கப்பல் நாட்டை வந்த டையவுள்ளது. 40 ஆயிரம் மெற்றிக் தொன் ப(எ)ன்டி உரத்தை ஏற்றிய கப்பலொன்று அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் கொழும்பு துறைமுகத்தை வந்த டையவுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டது.

## மக்கள் மனங்களில் வாரியார் .....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்கள் – தாள, லயத்துடன், பக்கவாத்தியங்கள் இணைய வரும்பொழுது – கருத்துக்கள் பசுமரத்தாணி போல மனத்தில் சென்று பதிந்தேவிடும்.எந்த அளவுக்கு சைவசித்தாந்த, வேதாந்த அறிவு நிரம்பி இருந்ததோ அந்த அளவுக்கு – இசைஞானமும் அவரகத்தில் நிறைந்தே இருந்தது. இளமையிலேயே பல பாடல்களை மனனம் செய்திருந்த காரணத்தால் – கதைக்குப் பொருத்தமான கருத்துக்கள் பொதிந்த பாடல்கள் அங்கு வந்து நிற்கும். அப்படி வரும் பாடல்களையும் தன்னுடைய கணீரென்று குரலில் அவர் இசைத்தும் பாடும் பொழுது அந்த சரஸ் வதி தேவியே அவரை விண்ணிருந்து வாழ்த்திடுவார் என்றுதான் சொல்ல வேண்டும்.

இயலும், இசையும், நாடகமும் அவரின் பிரசங்கத்தின் முத் திரை எனலாம். தமிழ் மொழியை மிகவும் நுட்பமாய் அவர் அறிந்திருந்தார் என்றுதான் பலபேருக்கும் தெரியும்.அவருக்கு சமஸ்கிருதமும் தெரியும். பிரசங்கங்களில் அவர் காட்டுகின்ற நயத்தகு தமிழ் சொற்றொடர்கள் போல – பொருத்தமான இடங் களில் பொருத்தமான சமஸ்கிருதச் சுலோகங்களையும் காட்டி அதற்கான விளக்கங்களையும் அவர் காட்டுவதும் சிறப்பாகவே இருக்கும்.

பெண்கள் என்றாலே அவர்கள்தான் சமூகத்தின் கண்கள் என்று வாழ்வெல்லாம் எண்ணி வாழ்ந்தவர் வாரியார் சுவாமி கள். பெற்றெடுத்த தாயின் பெயரை (இனிஷியலாய்) பெய ருக்கு முன்னால் போடலாமே என்று எவருமே தமிழ்ச் சமூகத்தில் சிந்தியாததை, சொல்லாததைச் சொன்னவர் வாரியார் சுவா மிகள். அந்த அளவுக்கு பெண்மையைப் போற்றி நின்றார். புரட்சி புரட்சி என்கிறார்களே! இதுவல்லவா சிறப்பான புரட்சி!

கிடைத்த பொருளையெல்லாம் தனது சொந்தச் சுகத்துக்காக அவர் பயன்படுத்தவே இல்லை. பொருளை அருளான வழியில் பயனாக் கினார். பள்ளிக் கூடத்துக்கே போகாதவர் – காங்கேய நல்லூரிலே துவக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆண்கள் மேல்நிலைப்பள்ளி என்று பள் ளிகளை நிறுவி வருங்காலச் சந்த திகளுக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

வயலூரில் அருணகிரி அறச்சாலையினை நிறுவி உணவ ளித்து நிற்க உறுதுணையானார். பசிப்பிணிக்கு மருந்தானார். பக்குவம் பெற கல்விக்கு கலங்கரை விளக்கமானார். வந்த பொருளையெல்லாம் இறைவனது ஆலயத் திருப்பணிக்கும் கொடுத்து ஆனந்தம் அடைந்தார். தர்மம் செய்ய நினைத்தால் தாமதிக்கக் கூடாது என்பதுதான் வாரியார் எண்ணமாக இருந் தது.

தர்மத்தைத் தனது மனதில் இருத்தித் தேடிய பொருளையெல் லாம் பயனுறு வகையில் செய்த வாரியார் சுவாமிகள் – கொடுத் துச் சிவந்த கைகளை உடையவராய் விளங்கிய ஒருவரை வாழ்த்தி பொன் மனச் செம்மல் என்று விலைமதிப்பில்லாப் பட்டத்தை வழங்கினார். பல பட்டங்களை அவர் பெற்ற பொழுதும் வாரியார் சுவாமிகளால் வழங்கப்பட்ட இப்பட்டமே இன்றளவும் அவரை யாவரிடத்தும் அறியச் செய்து நிற்கிறது எனலாம். அவர்தான் மூன்று எழுத்தில் மக்கள் மனதில் பதிந்த தமிழ் நாட டின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள். வாரியார் சுவாமிக ளின் வாழ்த்தின் பின் அந்த மூன்றெழுத்தாளர் மக்களின் திலகமாகவே ஆகிவிட்டார் வாழ்த் துவார் வாழ்த்தினால் அதுதான் பெரு வரமாகும். வாரியார் வாழ்த்தும் அப்படியானதே!

மண்ணுலகில் பிறப்பவர்கள் யாவருமே மண்ணை விட்டுப் பிரிவது என்பது தவிர்க்க முடியாததுதான். அப்படிப் பிரிந்தவர் களை காலமாகிவிட்டார் – அமரராகிவிட்டார் – இறையடி சேர்ந்து விட்டார் – தெய்வீகமானார் என்றெல்லாம் சொல்லுவது மரபாகி விட்டது. இப்படிச் சொல்லுவது எல்லோருக்கும் பொருந்துமா என்று சிந்தித்துப் பாருங்கள்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்**

இக்குறள் வழியில் சிந்தித்தால் யாரை வானுறையும் தெய்வ நிலைக்கு அதாவது – காலமாகி விட்டார், அமரராகி விட்டார், இறையடி சேர்ந்து விட்டார், தெய்வீகமானார் – என்று சொல் லுவது பொருத்தமாய் இருக்கும் என்பது தெளிவாகிறதல் லவா!

வள்ளுவத்தின் கருத்துப்படி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வருக்கு இப்படிச் சொல்லுவதுதான் பொருத்தமாய் இருக்கிறது அல்லவா! அந்தவகையில் வாரியார் சுவாமிகள் போன்றவர்களையே – மண்ணுலகை விட்டுப் பிரியும் நிலை யில் இப்படி அழைக்கலாம் என்பது பொருத்தமாய் இருக்கும் என்பதைக் கருத்திருத்த வேண்டியது அவசியமாகும் என்று கருதுகிறேன்.வாரியார் சுவாமிகள் நாத்திகர்களையும் ஆத்தீகத் தில் நாட்டங் கொண்டிடச் செய்தார். சினப்போரையும் சிந்திக்க வைத்தார். சிரிப்பினை மருந்தாக்கிக் கொடுத்தார். வைதாரையும் வாழ்த்தினார். எதிர்த்தவர்களையும் இரக்கத்துடன் பார்த்தார்.

சுவாமிகளின் ஆன்மீகத் தொண்டு.அவரின் அறப்பணிகள். அவரின் சிந்தனையால் வெளிவந்த படைப்புகள். அவரின் உரைகள் பதிந்த ஒலி ஒளிக் காட்சிகள் . வெள்ளித்திரையில் வந்தும் வேலவனைக் காட்டிய அவரின் பாங்கு.இவையனைத் துமே அவர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார் என்றுதானே எண்ணத் தோன்றுகிறது. ஆகையால் அவர் அமரரானாலும் எங்கள் மத்தியில் இன்னுமே வாழ்ந்து கொண்டுதான் இருக்கி றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2022இல் வெளியிடப்பெற்றது.